1978 மார்ச் 16]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

பாளைய வாரியங்கள் நடத்தும் பள்ளிகளுக்குக் கல்வி மானியம் நிறுத்தி வைக்கப்பட்டதனால் ஏற்படும் இன்னல் குறித்து.

THIRU K. S. GANAPATHI: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the effect of G.O. Ms. No. 23, Education Department, dated 4th January 1978 directing the stoppage of teaching grant to schools run by the Cantonment Boards and the resultant threat of the closure of these institutions resulting in problems to teachers and thousands of parents and students.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1964-65 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தணிக்கை செய்யும்போது தமிழ்நாடு கணக்காய்வுத் தலைவர் (Accountant-General, Madras), நீலகிரி மாவட்டம் அரவங்காட்டிலுள்ள கார்டைட் தொழிற்சாலை உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர் மான்யம் வழங்கியுள்ளதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். இதற்கு அடிப்படை காரணம் உதவிக் கொடை தொகுப்பு (Grant-in-aid Code) விதி 1-லுள்ள ஏற்பாடாகும். இவ்விதியின்படி தனியார் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் மட்டுமே மான்யம் பெற தகுதியுண்டு. இத்தணிக்கை மறுப்பின் காரணமாக மத்திய அரசுத் துறைகளால் இம்மாநிலத்தில் நடத்திவரப்படும் எல்லா பள்ளிகளுக்கும் மான்யம் கடந்த காலம் முதற்கொண்டு நிறுத்தப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட பள்ளிகளுக்கு தொடர்ந்து இம்மாநில நிதியிலிருந்து மான்யம் வழங்கும் கருத்துருவை அரசு மிக விரிவாகப் பரிசீலித்தது. மாநில அரசின் நிதி வசதி குறைவானதாலும், மத்திய அரசு நிதியிலிருந்து உதவிபெற்று இப்பள்ளிகளை நடத்துதல் கஷ்டமானதாக இருக்காது என்பதாலும், மத்திய அரசு துறைகளால் இம்மாநிலத்தில் நடத்தப்படும் பள்ளிகளுக்கு, தணிக்கை தடை செய்யப்பட்ட ஆண்டிலிருந்து மாநில நிதியிலிருந்து மான்யம் வழங்குவதை நிறுத்த இவ்வரசு முடிவு செய்து, இதற்கான ஆணையை 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிறப்பித்துள்ளது. கன்டோன்மெண்டு கழகங்களால் நடத்தப்படும்

பள்ளிகளையும் மற்றும் கார்டைட் தொழிற்சாலை உயர்நிலைப் பள்ளியையும் இவ்வாசாணையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கன்டோன்மெண்டு கழகத்திலிருந்து தனது நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிகளை மூட கருத்து கொண்டுள்ளதாக அறிவித்து எந்தக் கடிதமும் இதுகாறும் அரசினரால் பெறப்படவில்லை. அப்படி ஏதாவது கடிதம் பெறப்பட்டால், இக்கழகத்தின் கோரிக்கை அப்பள்ளிகளில் படித்துவரும் மாணவர்கள், பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள், மற்ற ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்பட்டு தக்க ஆணை பிறப்பிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவரவர்களே, 1964-65 ஆம் ஆண்டு தணிக்கையாளர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களின் மீது 1978 ஜனவரியிலே முடிவு எடுத்திருக்கிறார்கள். நம் மாநிலத்திலே இதுபோன்று 6 பள்ளிகள் இருக்கின்றன. நெய்வேலியில் 2 பள்ளிகளும், பல்லாவரம் கன்டோன்மென்டில் 2, ஹெவி வெகிக்கிள்ஸ் பாக்டரியில் ஒன்று, அரவங் காட்டில் ஒன்று என்று மொத்தம் 6 பள்ளிகள். தனியார் பள்ளிகளுக்கு அரசினுடைய மான்யம் பெறத் தகுதியுண்டு. கிராண்ட்ஸ் இன் எய்ட் விதி 1-ல் உள்ளபடி மான்யம் வழங்குவது அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அந்தப் பள்ளி அங்குள்ள ஒரு ரெஜிஸ்ட்டர்ட் சொசைட்டியால் நடத்தப்படுகிறது. ஆகவே அந்தப் பள்ளிகளைத் தனியார் பள்ளிகள் போலக் கருதி, அவை களுக்கு முழு மான்யத்தை வழங்குவதற்கான நடைமுறை விதிகளை அரசு கொண்டுவருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பல்வேறு மத்திய அரசுத் துறைகளால் இம்மாநிலத்தில் நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு மான்யம் இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. தனியார் பள்ளிகள் போல நடத்த இந்த விதிகளைத் திருத்துகின்ற அளவுக்கு முயற்சிக்கலாம். அவர்களுக்கு மான்யம் கிடைக்க முயற்சிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவரவர்களே, இந்த கன்டோன் மெண்ட் பள்ளிக்கும் நடுவண் அரசுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இந்தப் பள்ளி போர்ட் நிர்வாகத்தின்கீழ், தனியார் நிறுவனம் போன்றுதான் நடக்கிறது. எனவே அவைகளைத் தனியார் பள்ளிகளைப் போல நடத்த இந்தச் சட்டத்தைத் திருத்த முயற்சிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை உடனடியாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாகச் செய்யாவிட்டால், அடுத்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கை நடக்கும்போது, தடைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 16]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, அந்த முயற்சிகளை அந்தப் பள்ளி நிர்வாகத்தினரே உடனடியாக எடுக்க வேண்டும். அவர்கள் உடனடியாக எடுத்து அரசுக்குத் தெரிவித்தால், தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினை.

சட்டமன்றப் பேரவையில் திரு. சுப்பு அவர்கள் மேலவையைப்பற்றிப் பேசியது குறித்து.

புலவர் புலமைப்பித்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவரவாகளே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப விரும்புகிறேன். இன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், இந்த அவை * * என்ற வகையில் பேசியதாகத் தெரிகிறது. This is a mother chamber என்றுதான் நான் கேள்விப் பட்டிருக்கிறேனே தவிர, * * என்று நான் கேள்விப்படவில்லை. இந்த அவையினுடைய சிறப்பை, கவுரவத்தைக் குறைக்கின்ற வகையில் இப்படிப் பேசியது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அப்படிப் பேசியது உண்மை. உடனடியாக அதைப்பற்றிப் பிரச்சினை எழுந்தது. சபாநாயகர் அவர்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்ப வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினையில், பேரவையின் அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொல்லி தலைவரே அந்த வார்த்தையைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டதால், அதைப் பற்றிப் பிரச்சினை யில்லை என்று நினைக்கின்றேன். இன்னொன்று இங்கு எடுத்துச் சொல்கிறேன். யார் என்ன சொன்னாலும், இரண்டு அவையும் சம அந்தஸ்து உள்ளவைதான். இன்னொன்று இந்த அவைதான் முன்பிருந்து இருப்பதாலும், அதில் வயது

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.